174

கடவுள் துணை

# பாண்டியா

ஓர் இனிய தமிழ் நாவல்

இது

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்
அங்கத்தினரான

ஜி. ஜார்ஜ் தங்கசாமி

இயற்றியது.

சென்னை டெக்ஸ்ட் புக் கமிட்டியாரால் அங்கிகரிக்கப்பட்டது.

மூன்றம் பதிப்பு.

] 1930. [விலை அணா 10.

174

# FOREWORD.

IT was, with great pleasure, that I agreed to say a few words in commending this little book to the public.

UNLIKE a number of recent Tamil Novels, which are, as a rule, love-stories, "PANDYA" aims at depicting the nobler aspects of the Indian aristocracy in a highly interesting and inspiring manner. It brings out, most effectively, all that is best in Indian manners and customs and inculcates the highest moral truths by homely illustrations. The numerous quotations from Standard Authors are sure to create in the minds of the readers a love for Tamil Poetry, a fertile but neglected field in Tamil literature.

THE book is written in simple elegant Tamil and is suited to all classes of people. It may also serve as a valuable text for non-detailed study in High Schools.

I hope that this work will be appreciated by the Tamil reading public, and the young author, Mr. G. George Thangasamy, will be encouraged to produce many more publications for the benefit of our countrymen and the enrichment of our language.

Mission Street,
Tanjore.
11—9—24.

(Sd.) S. G. DANIEL,

*Retired Asst. Inspector of Schools*

# Preface to Third Edition.

THE favourable reception which the first and second editions of the book have met with has encouraged the author to bring out a third edition. The author's thanks are due to all who have helped him with valuable criticisms and suggestions which have been responsible for some alterations in the present edition.

IT is believed that these alterations are important and the author hopes that the third edition will obtain the same encouragement that it was the good fortune of the earlier editions to receive.

AUTHOR.



## அத்தியாயம் 1.

கடல் சூழ்ந்த நில வரைப்பில் குண கோளார்த்தம் என்னப்படும் தொல்லுலகத்தி லுள்ள கண்டங்கள் நான்கனுள் ஆசியாக் கண்டம் பெரிதாகும். அதன்கண் அடங்கிய நாடுகள் அனைத்திலும் இந்து தேசம் சிறந்தது. இது

“ ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு ”

என்னும் தமிழ் மறைக் கிணங்க, ஆங்கில நாட்டரசரும் நம் நாட்டின் சக்கரவர்த்தியுமாகிய ஐந்தாவது ஜார்ஜ் பெருமான் நீதியோடு ஆட்சி புரியும் மாட்சியால் நீர்வளமும் நிலவளமும் மிக்கு, உழவு, வாணிகம் முதலிய தொழில்களால் மேம்பட்டு, பசியும் பிணியும் பகையு மின்றிக் கல்வி நலமும் பொருள் வளமும் பெற்றுக் குடிகள் இன்புற்று வாழும் இடமாக நிலவுகின்றது.

இதன்கண் புண்ணிய நகரங்களுள் ஒன்றாய், சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த பாண்டியர்க்கு இராஜதானியாய் விளங்கிய மதுரை மாநகர்க்கு இருபத்தைந்து மைல் தூரத்தில் பல்வளமும் படைத்த அளகாபுரி எனப் பெயரிய ஒரு சிற்றூர் உளது. அங்குக் காலந் தவறாமல் மழை பொழிதலால் ஆறு, குளம் முதலிய நீர் நிலைகளில் எக் காலத்தும் நீர் நிறைந்திருக்கும். அதனால் ஆடவரும் மங்கையரும் மிக மகிழ்வுடன் தடாகங்களுக்குச் சென்று, தண்ணீரில் இறங்கிப் பன்முறை மூழ்கி யெழுந்து நித்திய கர்மங்களை முடித்து, உள்ளன்போடு கடவுளை வழிபட்டு, உறவினர், நட்பினர், அயலார் என்கின்ற யாவரிடத்தும்

அன்போடு உரையாடி, துன்பத்தால் மன மொடுங்கி மெய் யிளைத்து வாடும் எளியோர்க்கு வேண்டுவன புரிந்து நல்ல நெறியிற் காலம் போக்குவார்கள்.

ஆங்காங்குள்ள தாமரைத் தடாகங்களிலும் அல்லிக் குளங்களிலும் கொக்கு, செங்நாரை, வெண்ணாரை முதலிய நீர்ப்பறவைகள் தங்கள் தங்கள் இனங்களுடன் கூடிச் சூரியன் புறப்படும் அந்தக் காலைநேரத்தில் தண்ணீரில் துள்ளி விளையாடும் சிறு மீன்களையும் மற்ற நீர்ப் பூச்சி களையும் தங்கள் செந்நிறம் பொருந்திய அலகுகளினுற் கொத்தி யருந்தி, எஞ்சியதைத் தம் சிறு பார்ப்புக்களுக்கு ஊட்டி, அருகி லிருக்கும் நந்தவனங்களி லுள்ள பெரிய மரக்கிளைகளில் உட்காந்துகொண்டு, தங்களுக்கும் தங்கள் இனங்களுக்கும் அன்றன்றைய உணவைக் கொடுத்து அபாயஞ் சிறிதுமின்றிக் காத்துவரும் கருணை வள்ளலை நினைத்துத் துதிப்பது போல நீனிற மேகத்தை நோக்கி ஒலிக்க, கருங்குயில், மாங்குயில் முதலிய பறவைகள் கூடித் தலை நிமிர்த்துக் கூவ, மெல்லிய தென்றல் நாற்புறமும் வீச, மயிலினங்கள் களிப்புடன் தம் சிறகை விரித்தாட, வண் டினங்கள் அன்று மலர்ந்த மலர்களினின்றும் நறுந்தேனை யுண்டு ரீங்காரம் செய்ய, தடாகத்தில் மோதிய காற்றினுல் எழுந்த அலைகள் பற்பல இடங்களில் தலைவணங்கி விழ, எட்டுத் திக்கிலும் மட்டில்லாத மா, பலா, வாழை, மாதுளை, தென்னை, கமுகு முதலியன மிகுந்துள்ள சோலைகளும், மிளகு, வால்மிளகு, ஜாதிக்காய், ஏலக்காய், கிராம்பு முதலிய வற்றைத் தரும் தோட்டங்களும், மல்லிகை, முல்லை, சண் பகம், ரோஜா, செந்தாழை, வெட்டிவேர் முதலியவைகள் நிறைந்த பூங்கொல்லைகளும் மிகச் செழித்தோங்கும் அச் சிற்றூரின் சிறப்பை எங்ஙனம் பகர்வது? அது பெயராற் சிற்றூரெனினும்,

"பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

என ஆன்றோர் கூறியதற் கிணங்க நில நலத்தால் நோயின் மையும், பல வளத்தால் செல்வமும், செல்வத்தால் இன்பமும்

தருதலோடு அரணும் அமைந்திருத்தலின் பேரூரினும் பெருமை சான்றது.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்து வானவர் உலகம் போல் விளங்கும் அவ்வூரின்கண், கடவுளிடத்தில் அன்பும், மன்னுயிரைத் தன்னுயிர் போலக் கருதும் மாண்பும், அடக்கம், பொறை முதலிய சீலமும் தாங்கி, அறநெறி தவறாது மாண்புடன் வாழும் வீரசிங்கபாண்டியன் என்பான் தன் கருத்திற் கமைய ஒழுகும் கற்புடைய மனைவியாகிய ஜீவரத்தினம் என்னும் பெண்மணியோடு பாண்டியன் மஹால் என்னும் மாளிகையில் இருந்து இல்லறம் நடத்தி வந்தான்.

அம்மாளிகை மூன்றடுக்கு உள்ளதாய், உலகம் முழுவதும் வரினும் வெறுப்பின்றி நெடுங்காலம் வசிக்கக் கூடியதாய் அகன்றிருந்தது. அதில் எண்ணிறந்த பொன்னறைகள் இருந்தன. ஒவ்வொரு அறையிலும் உயர்ந்த நிலைகள் அமைந்த வாயில்களும், எப்பொழுதும் நல்ல காற்று உட்புகவும் கரியமல வாயுத் தடையின்றி வெளியிற் செல்லவும் பலகணிகளும் அமைக்கப்பட்டிருந்தன. வாயில்களுக் கருகிலும் பலகணிகளை ஒட்டியும் பசுமையான செடிகளும் பூங்கொடிகளும் அழகுபெற வைக்கப்பட்டிருந்தமையின், மணம் அளாவிய குளிர் காற்று வீசிக்கொண்டிருக்கும். வாயில் நிலையிலும் கதவுகளிலும் பலகணிகளிலும் உயர்ந்த சாயம் பூசப்பட்டிருந்தது. வீட்டின் உட் சுவர்களும் வெளிச் சுவர்களும் விஷப் பூச்சிகள் தங்குதற் குரிய சிறு துளையும் இல்லாதபடி கிளிஞ்சிற் சுண்ணம்பு தீற்றப் பெற்றுப் பால் போல் வெண்மையாய் விளங்கின.

மேலும், முற்காலத்தில் பெரியோர்கள் புரிந்த நன்மைகளை இக்காலத் துள்ளவர்கள் கண்டறிந்து தம்மால் இயன்ற வரையில் நாட்டிற்கு நலம் புரிய வேண்டு மென்பதை நினைப்பது காரணமாக, மக்களுக்கு ஆவன செய்து காலம் சென்ற பெரியோர்களின் உருவம் வரைந்த படங்கள் சுவர்

களில் நாலா பக்கங்களிலும் மாட்டி வைக்கப்பட்டிருந்தன. இன்னும் வேப்பங் கரியால் மூட்டிய தணலில் சந்தனக் கட்டை, அகிற் கட்டை, சாம்பிராணி முதலியவைகளை இட்டு உண்டாக்கிய புகை உட்புறம் எங்கும் பரவிச் சுகத்திற்கு ஏதுவான நன் மணத்தையே தந்துகொண்டிருக்கும். அவ்வில்லத்தின் தளவரிசை திண்மை வாய்ந்த செங்கற்கள் பரப்பப்பட்ட தாகலின் மழையாலும் மற்றவைகளாலும் உண்டாகும் ஈரமும் ஒரு நொடிப் பொழுதில் உலர்ந்துவிடும்.

அங்கு இலவம் பஞ்சடைத்த மெத்தை அமைத்திட்ட நாற்காலிகளும் சோபாக்களும் பல இடங்களிலும் வரிசையாக இடப்பட்டிருந்தன. இவ்வாறு பலவிதமான மகிழ்ச்சிகளை அடைவதற்கு ஏற்றவாறு பெருஞ் செல்வம் நிறைந்திருப்பினும், செல்வம் நிலையில்லாததென வீரசிங்க பாண்டியன் உள்ளபடி அறிந்தவனாதலால், அவன் அதனைத் தனக்கே உரிய தென்று நினையாமல் ஊருணியில் நிறைந்த நீர்போலவும் உள்ளூரிற் பழுத்த நன்மரம் போலவும் பலர்க்கும் பயன்பட வாழ்பவன். இவன் மனைவியும் கற்பிற் கண்ணகியையும், பொற்பில் திருமகளையும் ஒத்தவள். ஏழையைக் காணில் இரங்கு நெஞ்சமும், பசித்து வந்தவர்க்குப் பரிவுடன் முகமலர்ந்து உபசரிக்கும் பான்மையும் உடையவள்.

சொற் றவறாத இப்பாவையோ டிருந்து, இப்பெருந்தகை இல்லறத்தை இனிதாக நடத்தி இன்புற வாழ்ந்திருக்கும் நாட்களில் ஓர் நாள், நல்ல குடியிற் பிறந்தவரும், தூய மனம் படைத்தவரும், தேவ பக்தியிற் சிறந்தவருமான பலர் வீரசிங்க பாண்டியனது நற்குண நற்செய்கைகளைப் பன்முறையும் பலரும் சொல்லக் கேட்டு வியந்து,

> " அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
> திறனறிந்து தேர்ந்து கொளல், "

என்னும் மறை மொழியைக் கடைப்பிடித்து இவனோடு நட்புக் கொள்ள வேண்டி இவனது மாளிகையை நோக்கி வருவாராயினர்.

வந்தவர்கள் தன் நட்பு நாடி வந்த மாசற்ற மனத்தினர் என்பதை, எவரெவர் தன்மையையும் முகத்தை நோக்கி அறிய வல்ல பாண்டியன், குறிப்பால் உணர்ந்து தக்க வாறு இருக்கை அளித்து, முகமன் உரைத்து, அவர்களின் நட்பு நீடித்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆவின் பாலை அவர்க் குதவி, நெடுநேரம் வரையில் அவர்களோடு உரையாடி யிருந்தனன். பின்னர் அவர்களும் அளவளாவி யிருந்து மகிழ்ச்சியோடு தங்கள் தங்கள் வீடு போய்ச் சேர்ந்தனர். அன்று முதலாக இவர்களின் நட்பு வளர் பிறைபோல் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வந்தது. இவ்வாறு புதிதாக நட்புக் கொண்டாருள் ஒருவர் பரசுராம பிள்ளை என்பவர். அவர் நம் பாண்டியனைப் போலக் கல்வி யிலும் கேள்வியிலும் சிறந்தவ ராதலால் மற்றவர்களைவிட அவரையே சிறந்த நண்பராகக் கொண்டதோடு அமையா மல் தனக்குத் தெரியாத உண்மைகள் பலவற்றையும் அவரைக்கொண்டு தெளியலாம் எனக் கருதினன் பாண்டி யன். அதனால் பரசுராமபிள்ளை பாண்டியனுக்கு வலது கையாக விளங்கினர். அன்று முதல் அன்பொத்த இருவர் நட்பும் வேரூன்றுவ தாயிற்று. இன் சொல்லும் அகத் தன்பும் அவனிடம் அதிகரித்தன. பிறர்க்கு நன்மை செய் வதே சிறந்த பேறு என்னும் எண்ணம் அவனுக்குள் நிலை பெற்றது. இங்ஙனம் அன்பும் அருளும் பெருக நாட்டிற்கு நன்மையே அவன் புரிந்து வந்தமையால் உலக முழுவதும் அவன் புகழ் பரவுவ தாயிற்று.

கதிரவன் பகலெல்லாம் சுற்றிக் களைப்புற்றவனாய்த் தன் செந்நிற வொளியுடன் மாலைப்பொழுதில் மேற்கடலிற் சாய்ந்தான். அச்செவ்வொளி அருகி லிருக்கும் நீல மேகத் திற் பரந்து கண்ணிற்குக் காட்சியளித்ததுடன் மனத்திற்கும் மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதைக் கண்ணுற்ற பாண்டியனும் பரசுராமபிள்ளையும் மனங் களித்து இறைவன் செயலையும், இயற்கை அமைப்பின் வல்லமையையும் அடுத் தடுத்துக் கண்குளிரக் கண்டு புன்னகை கொண்டு சிறிது நேரம் வெளியே சென்று உலாவி வருதல் நலமென நினைந்து மேற்றிசையை நோக்கிப் புறப்பட்டனர்.

தென்றல் மெல்லெனத் தம் மேனியில் வீச இவர்கள் மகிழ்ச்சியுடன் வீட்டினின்றும் புறப்பட்டுச் சிறு மலைகளையும் பச்சைப்பசேரெனத் தோன்றும் தோட்டங்களையும் சிறு ஓடைகளையும் பார்த்து மகிழ்ந்து வியந்து பேசிக்கொண்டு பாண்டிய மஹாலுக்கு இரண்டு மைல் தூரத்தி லுள்ள பாண்டியபுரத்தை அடைந்தனர்.

பாண்டியபுரம் சில வருடங்களுக்கு முன்பு ஒரு ஜமீன் கிராமமாக இருந்தது. அங்கே கடைசியாக இருந்த ஜமீந்தார் இரத்தின விஜயதேவர் என்பவர். அவர் தம் ஒரே புதல்வனான சுந்தரதாசனுக்குப் பதினாறுவது ஆண்டு பிறந்த நாள் வெகுமதி யளிக்கச் செய்குன்று ஒன்று அமைத்திட்டு, கருணானந்தபுர மென்னும் சிங்காரத் தோட்டத்தினின்றும் தருவித்த நூற்றுக்கு மேற்பட்ட மாங்கன்றுகளையும், விலையுயர்ந்த பூச்செடிகளை வைத்துப் பயிர்செய்த தொட்டிகளையும், பாதைகளுக்கு வலப்புறம் இடப்புறங்களில் வரிசையாக வைக்க ஏற்பாடு செய்து அக்குன்றின் உச்சியில் அறுபது எழுபது பேர் இருப்பதற் கேற்ற அளவாய் ஒரு வீடு கட்டுவித்து அதில் இரங்கூன் தேக்கு மரத்தாலாக்கப்பட்ட பலவகை இருக்கைகளையும் இட்டு வைத்திருந்தனர். அந்தக் குன்றின் அடிவாரத்தில் எப்பொழுதும் நீர் சலசல வென்று ஓடும் ஊற்றும் அமைக்கப் பெற்றிருந்தது. இத்தன்மைய சிறப்பு வாய்ந்த அக்குன்றின் மீதுள்ள வீட்டில் பிறந்த நாள் விழாவுக் கென்று அழைக்கப்பட்டிருந்த கனவான்கள் முன்னிலையில் சுந்தரதாசனுக்குப் பாண்டியபுரத்தை வெகுமதியாக அளித்தனர்.

வீரசிங்கபாண்டியன் இத்தகைமை வாய்ந்த குன்றை யணுகிட, உண்மையாகவே அதனைச் செய்குன் றென்று அறியாமல் அதைக் குறித்துச் சிறிது நேரம் பரசுராம பிள்ளையுடன் வார்த்தை யாடிக்கொண்டிருந்து, இறுதியில் ஒருவாறாக ஒப்புக்கொண்டு, குன்றின்மீ தேறி அங்கிருந்த இருக்கைகளில் இரண்டை ஓர்புறம் அமைத்து வீற்றிருக்கையில், மாலைப் போழ்தில் மலர்ந்த பூக்களின் நறுமணம் அளாவிய குளிர்ந்த காற்றானது மெல்லென வீசிட, இவ்

வுலக இன்பங்களை எல்லாம் மறந்து, பரமானந்தங்களைக் குறித்துச் சிந்தனை செய்யவும் ஒருவாறு பேசவும் தீர்மானித்தனன்.

அத்தருணத்தில், பாண்டியன் பரசுராமபிள்ளையை விளித்து, "நண்பரே! இவ்வுலகம் நிலையில்லாதது. இதிற் காண்பனவும் பொய், கேட்பனவும் பொய் என்பதை மக்கள் யாவரும் நேரிற் பார்த்துணர்ந்தும் வீண் பெருமையையும் ஆடம்பரத்தையும் விட்டுவிட்டு நித்திய நாதனைச் சுத்த மனத்துடன் பக்தி செய்து வாழ்ந்திருக்க ஏன் விருப்பங் கொண்டிலர்?" என்னும் கேள்வியைக் கேட்டான். அதற்கு "தாங்கள் கூறிய யாவும் உண்மையே, ஆயினும் அவ்வகையான நன்மைகளை நன்குணரும் பாக்கியசாலிகள் மிகவும் சிலரென்றே சொல்லலாம். அவர்களும் ஓரடி யேறினல் ஒன்பதடி இறங்கி விடுகிறார்கள். மூவாசைகளும் அன்னவர்களை மதி கலங்கச் செய்கின்றன. சற்று யோசிக்கும் போது இவ்வுலகத்தில் அநேகர் "மாதா வயிறெரிய மகேச்சுர பூஜை செய்வார்" போல் பெற்றோர்கள் தள்ளாடும் காலத்தில் அவர்களுக்கு இடுக்கண் பலவும் புரிந்து, மற்றவர்க்கு உற்ற நண்பராகி ஆவன செய்து உலகம் மெச்ச அவர்களை ஆதரிக்கின்றனர்.

சிலர் நாட்டார் நகைசெய்ய மயக்கம் தரும் பொருள்களையுண்டு மதிமயங்கி, செத்த பிணம்போற் கிடக்கின்றனர். இன்னுஞ் சிலர் பிறர் வாழ மனம் பொறாமல் பொய்ச் சாட்சி சொல்லுதல், ஒருவரை ஒருவரினின்றும் பிரித்தல் முதலிய தீய காரியங்களைச் செய்து இறக்குங் காலத்தில் அறிவு கலங்கி, 'ஐயோ!' என்றலறி உயிர் விடுகின்றனர். இதுவன்றி, "எண்ணித் துணிக கருமம்" என்னும் ஆன்றோர் முதுமொழியினை மறந்த சிலர் எதனையும் தீர யோசியாமற் செய்துவிட்டுப் பின்னர் வருந்துகின்றனர்.

இது வல்லாமல் ஒரு பொய்யை மறைக்க நினைந்து ஒன்பது பொய்யைச் சொல்லியும், அது மறைக்கப் படாமையால் அதற்காக எவரிடத்திலும் கோபமும். அக்கோபத்

தினுல் ஊரெங்கும் பகையும், பின்னர் பெரிய சண்டையும் உண்டாவதை நேரே கண்டறிந்தும், "இகமே கதி, இதை விடப் பரகதி வேறில்லை, என்று நினைப்பார்க்கு நம் சொல் எவ்வாறு ஏற்கும்? கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனக்கொண்டு வாழ்பவர் தம் கண்ணுக்குத் தெரியாத அவ்வுலகைப் பற்றி எங்ஙனம் சிந்திப்பார்? இவர்களுக்கு கடவுளைப் பற்றிய எண்ணம் எக்காலத்திலாவது ஏற்படும் என்று நினைக்கவும் இடமுண்டோ" என்ருர் பரசுராம பிள்ளை.

மேற் கூறப்பெற்றவைகளை நன்கு கவனித்த பாண்டி யன், "நீங்கள் கூறுவது என்னே? மானிடஜன்ம மெடுத்த நாம் நம்மைப் போலவே இவ்வுலகி லுள்ள ஏனைய மாந்தர் களையும் நல்வழிக்குக் கொண்டுவர முயலாது வீணே யிருத் தல் நன்ருகுமோ? நமக்குத் தெரிந்த வளவு மற்றவர்களுக் கும் புகட்டி அவர்களும் ஈடேறும் வண்ணம் செய்யவேண் டியது நமது வேலை யன்ரோ?" என்பதாகச் சொல்லுகையில், பரசுராமபிள்ளை, "நண்பரே! நீங்கள் கூறிய யாவும் உண் மையே. அவ்விதம் செய்ய வேண்டியது நம் பெருங் கடமையே யாகும். ஆயினும் அதைக்குறித்து இப்பொழுது பேசி முடியாது. ஏனெனில் இருட்டிவிட்டது. நாம் போக வேண்டிய தூரமோ இரண்டு மைல் இருக்கின்றது. ஆகையால் அதனை இதனுடன் நிறுத்துவோம். நாளைக்கு அதைக்குறித்து சிறிது நேரம் செலவிடலாம். நானும் நாளை முன்னேரத்திலேயே உங்கள் இல்லம் வந்து சேருகிறேன். வாருங்கள் புறப்படலாம்" என்ருர்.

இவ்விதமாக அவ்விருவரும் பாண்டியபுரத்தை விட்டுப் பாண்டியமஹால் வந்தடைந்ததும் பரசுராமபிள்ளை இரவு வந்தனம் புரிந்து தம் இல்லம் சேர்ந்தார்.

---

## அத்தியாயம் 2.

மாலையில் தமது ஆருயிர் நண்பராகிய பரசுராமபிள்ளையுடன் நெடு நேரம் வரையில் உரையாடிக்கொண்டிருந்த வீரசிங்க பாண்டியன் இரவின் நடுச்சாம மளவும் இமை கொட்டாது உலக வாழ்க்கைக் குரிய நன் முறைகள் பலவற்றைக் கண்டறிதல் மிக்க அவசியமெனச் சிந்தனை செய்திருந்தனன். அதனுடன் அமையாமல் மறுநாள் மாலை வரையில் பரசுராமபிள்ளையின் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருந்தான்.

பாண்டியன் :—வாருங்கள்! இப்போதுதான் உங்களைக் குறித்துச் சிந்தனை செய்துகொண் டிருந்தேன்; நீங்களும் வந்துவிட்டீர்கள். உங்களுக்கு வயது நூறு. என் அறியாமையைப் போக்க உங்களை யொத்த அறிவாளிகள் அருகில் இல்லாமையைக் குறித்து மனம் வருந்தும் சமயத்தில் நீங்கள் வந்து சேர்ந்தது எனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

பரசு :—எல்லாம் பெரியோர்கள் வாக்குப் படியே ஆயுளும் நீடிக்கட்டுமே! தாங்கள் நான் வாச் சிறிது தாமதித்ததைக் குறித்து ஏன் வீணிலே மனக்கவலை அடைய வேண்டும்? நேற்று மாலையிற் சொல்லிய வாறு குறித்த நேரத்தில் வந்துசேர மாட்டேனு? இன்று நான் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் பல விருந்தன. அவற்றை என் மகன் சேது இரத்தினத்திடம் ஒப்புவித்து, சொன்ன சொல்லைக் காக்கும் வண்ணமே ஓடி வந்தேன். ஒருவன் தான் சொன்ன சொல்லைக் காப்பதைவிட வேறு பெரும் காரியம் என்ன இருக்கிறது? சொல் தவறுகிறவனைத் தக்கவனென்று எவர் சொல்லத் துணிவர்?

பாண்டியன் :—மன்னிக்க வேண்டும். நான் நினைத்தது பெரும் பிசகே. நண்ப! முன்னேர் வாக்குப் பொய்யாகா தென்பது திண்ணமே.

பரசு :—அதென்ன, தங்களுக்கு இப்போது தோன்றிற்று?

பாண்டியன் :—நான் இளைஞனாக இருக்கையில் பாடசாலையில் பயின்று வரும் நாட்களில் ஒரு நாள்,

"அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா"

என்பது போன்ற அரிய பொருள்களை உணர்த்தும் பல நூல்களைப் படித்தேன். அந்நீதி நூல்கள் இவ்வுலகத்தில் துன்பமாகிய கடலைக் கடக்கும் தெப்பமாக இருந்தும், விழலுக் கிறைத்த நீராயின. அக்காலத்தில் என்னுடன் கற்ற நண்பர்கள் பலர் இருந்தும் அவர்களால் நான் ஒரு நன்மையும் அடைந்திலேன். ஆனால் அநேக நற்காரியங்களின் பயனை நான் அனுபவிக்கவும், உலகினர் அடையவும், உத்தம நண்பராகிய நீங்கள் என்னோடு நட்புக் கொண்டது யான் செய்த புண்ணிய மாகும். இதைவிட உலகில் மனிதர்க்கு என்ன வேண்டும்? "அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றபடி உங்களுடைய நற்சிந்தையும், பெருந்தன்மையும், கருணையும் உங்கள் முகத்தில் பளிச்சென்று விளங்குகின்றன. நண்ப ரென்றால் எல்லோரும் நண்பராவரா? கல் லெல்லாம் மாணிக்கக் கல் லாமா? பாலெல்லாம் நல்லாவின் பாலாமா? ஆகா தல்லவா! சிறந்த குணங்கள் பலவும் நிறைந்த உங்களை நண்பராக எவர்தாம் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்?

பரசு :—நான் எம்மாத்திரம்? நீங்கள் என்னை இவ்வளவு மேம்படுத்திக் கூறிவிட்டீர்களே; அதற்கு நான் எவ்வாறு உரியவ னாவேன்? சொல்லப் புகின் எல்லாவற்றிற்கும் கடவுள் அருளே காரண மாகும். உங்கள் பெருமையை அறிந்த பிறகு உங்களுக் குரிய நண்பர் பலரில் நானும் ஒருவனாக முயலும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. எல்லாம் இறைவன் செயலன்றி வேறில்லை. ஆகையால் எந்த வகை

யில் நான் தங்களுக்குச் சிறந்த நண்பன் ஆவேன்? இம்மை மறுமைப் பயன்களைப் பெறும் நெறிகாட்டி, நல்வழியைப் புகட்டி நல்வாழ்க்கைப் படுத்தும் நண்பரைத் துணையாகக் கொண்டு வாழ்பவர் பெறலாகாத பேறு என்னுளது?

பாண்டியன் :—நல்ல திருக்கட்டும். உலகத்திலே மக்களாகப் பிறந்தவர்கள் தம் பிள்ளைகளை மார்போ டணைத்து முகத்தோடு முகம் வைத்து முத்த மாடிக் கண்ணைக் காக்கின்ற இமைகளைப் போலப் பாதுகாத்து அவர் தளர் நடையைக் கண்டு களித்தலும், மழலைச் சொல்லைக்கேட்டு மகிழ்தலும் செய்து தக்க பருவத்தில் கல்வி பயிற்றி வளர்த்து வரவும், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் மூதுரையை மறந்து பெற்றோரிடத்து அன்பு பாராட்டாத பிள்ளைகள் என்ன பிள்ளைகளாவார்?

பரசு :—யார்? அவனும் பிள்ளையெனப் பெயர் பெறுவனு? அவன் என்ன பிள்ளை! தென்னம் பிள்ளை, அணிற் பிள்ளை, கீரிப் பிள்ளைதான். மேற் கூறிய சிறு பிராணிகளுக் கெனினும் சிறிது அறிவு இருக்கிறது. தருக்களுக்கும் பிராணிகளுக்கும் உள்ள நல்லறிவுகூட அவனுக்கு இல்லாமற்போனுல் அவனை என்ன வென்று கூறுவது? "பெற்றவ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்" எனக் கூறிய வாறே பிள்ளைகள் எல்லோரும் தங்கள் பெற்றோர்க்குப் பிள்ளைக ளாகிவிடுவரோ?

பாண்டியன் :—நன்று, நன்று, இது நிற்க.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை"

என்றபடி கல்விக்கு மேலான செல்வம் இல்லை என்றும், கல்வியே ஞானத்தையும், நல்லொழுக்கத்தையும் கொடுக்குமென்றும், கல்வியிலும் சிறந்த அணிகலன் இல்லை என்றும் உணர்ந்து, பல கலைகளையும், நல்லாசிரியரை வழிபட்டு ஒவ்வொருவரும் கற்றறிதல் அவசியமாகும். "எழுத்தறிவித்தவன் இறைவ னுகும்" என்பதற் கேற்ப ஆசிரியரைக்

கடவுளாக நினைத்து அடங்கி நடப்பதை விட்டுக் கீழ்ப்படியாது நடப்பவர் எந்தக் காலத்தில் ஈடேறுவார்கள்?

பரசு :—பெரியோர் சொல்லைப் பெரிதென நினைத்து அவர்களிட்ட வேலைகளைச் சிரமேற் கொண்டு செய்வதும், மூத்தோர்க்கு அடங்கி நடப்பதும், அவர்க்குத் தலைவணங்கி வந்தனம் புரிவதும், மாணவர்க்கும் சிறுவர்க்கும் இன்றியமையாத கடமை யாகும். ஏனெனில், கீழ்ப்படிதலே மேலானதென ஆன்றோர் கூறியிருப்பதால் அதற்கு மாறாக நடக்கிறவன் உள்ளபடியே தாழ்ந்தவனே. அவனைவிட வேறு கீழ்ப்படியி லுள்ளவனே கிடையாது. கீழ்ப்படித லென்னும் மேம்பட்ட குணமே மானிட வாழ்க்கைக்கு ஓர் வைப்பென மதிப்பவரையே மாநிலம் மதிக்கும். இன்றி யமையாத கீழ்ப்படிதலை வகித்தவரே சுகித்தவர். முன்கைநீண்டவாறே முழங்கையும் நீளு மன்றோ? கீழ்ப்படிபவருக்குக் கீழ்ப்படிபவர் கீழ்ப்பட்டவ ரல்லர்; மேற்பட்டவரே. குணமே பூஷணமா மன்றே?

> "பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்
> கணியல்ல மற்றுப் பிற"

கீழ்ப்படித லென்னும் சிறந்த குணம் ஒருவனுக் கேற்படுமாயின், அது அவன் செய்த நல்வினைப் பயன் என்று எண்ணப்படும்.

> "எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
> செல்வர்க்கே செல்வம் தகைத்து"

என்னும் தமிழ் மறை.

பாண்டியன் :—உலகிற் பிறந்தாருள் ஆண்மக்களை உடன் பிறந்தோராகவும், பெண்களில் மூத்தோரைத் தாய்மாராகவும், இளையோரைத் தங்கையராகவும் நினைத்து, எவர்க்கும் கேடு சூழாது தம்மால் இயன்ற வளவு உதவிகளை மனதாரச் செய்து ஈசனை மறவாது பணிந்து வாழ்த்தி, அரசன், அதிகாரி என்னும் இவர்களது கட்டளைக்கு அடங்கி, சத்தியத்தைக் கைவிடாது வாழும் குணசீலர்களின் சிறப்பு எவ்வளவு?

பரசு :—இவர்களைக் குறைகூற இயலுமா? எந்த நிலைமையில் எவனொருவன் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை உண்மையோடும் ஊக்கத்தோடும் செய்கிற நன்னடக்கை யுள்ளவனோ அவன் பாக்கியமே பாக்கிய மாகும். அவன் இவ்வுலகத்தில் உயர்ந்தவனா யிருப்பினும், எக்குலத்தில் உதித்த எவனா யிருப்பினும் பரமான்மாவின் முன்னிலையில் எத்தகைய நல்ல காரியங்களைச் செய்துவரு கின்றனனோ, அவற்றின் பலனாக அவ்வுலகத்தில் நல்ல பொருளைத் தேடிவைக்கும் புண்ணிய சீல னாகின்றான். அன்றியும் நித்தியமாய் நிர்மலமாய் விளங்கும் பரத்தை அடையும் பாக்கியத்தையும் பெறுகின்றான்.

பாண்டியன் :—நல்லது. தாங்கள் கூறியவாறு எவ னொருவன் கடவுள் திருவுள்ளத்திற்கு இசைந்து அவரது அருள் வாக்கினைக் கைக்கொண்டு நடப்பானோ அவன் வீட் டுலக வாழ்வு பெறுவதற்கு உரியவன் என்றீர்களே; ஆனால், சில சீமான்கள் தங்கள் தீய கன்மம் ஒழியு மாறு வஸ்திர தானம் முதலிய தானங்களைச் செய்வதும், கோயில் எடுப்ப தும், குளம் தொடுவதும், சத்திரம் சாவடி கட்டுவதும், பற் பல புண்ணிய தலங்களைத் தரிசிப்பதும், அரிய நோன்புகளை நோற்பதும், வேள்விகளைச் செய்வதும், முதலிய புண்ணிய கருமங்களால் முத்தி யடையலாம் என்கின்றனரே. இவர் களில் எவருக்கு முத்தி யுண்டாகும்?

பரசு :—அப்படி யல்ல. பசித்து வந்தவர்க்கு உப்பிட்ட நீரை சிறிதளவு கொடுப்பதும், ஆடை யில்லாதார்க்கு ஆடை வழங்குவதும் பெரிய உதவி யென்று சொல்லத் தடையில்லை. அவ்வித உதவியையும் அவனுக்குச் செய் ததாக நாம் நினையாமல், எவற்றினும் நிறைந்துள்ள அந்த வள்ளலுக்கே செய்ததாகக் கொள்ள வேண்டும். ஏனெனில், நம்மெல்லோருக்கும் காரண பூதமா யிருப்பவர் அவரே. இவ்வுலகத்தி லுள்ள மானிட கோடிகள் யாவரும் நமது சகோதர சகோதரிகளா யிருக்கிறார்கள். பசித்தவனுக்கோ ஆடை யில்லாதவனுக்கோ நாம் செய்த உதவியானது நமக் கெல்லாம் காரணனான அவனுக்கே செய்த உதவியாகும்.

நாம் செய்யும் தானதருமங்களால் நமது பாவ கர்மங்கள் நீங்கி விடுமென நினைத்தல் கூடாது. ஏனெனில் ஞானம் அல்லாத பிறவெல்லாம் ஞானத்தை உண்டு பண்ணுதற்குச் சாதனமே யல்லாமல் வீடு பேற்றிற்குக் காரண மாகா. ஞான மல்லாதன பந்த முறுத்துமே யன்றி வீடு பேற்றினைத் தந்திட மாட்டா. அஞ்ஞானங்க ளெல்லாம் விரிந்த ஒளி முன் இருள்போல ஞானத்தால் கெட்டொழியும். அஃது ஒழிய, பந்தம் நீங்கும் அது நீங்கவே, முத்திநிலை கைகூடும். ஆதலின் ஞானமே முத்திக்குச் சிறந்த சாதன மாகும். இதனை.

"ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண
நல்லாகமஞ் சொல்ல அல்லவா மென்னும்
ஊனத்தார் என் கடவர் அஞ்ஞானத்தால்
உறுவதுதான் பந்தம் உயர் மெய்ஞ்ஞானந்தான்
ஆனத்தால் அதுபோவ தலர்கதிர் முன் இருள்போல
அஞ்ஞானம் விடப்பந்தம் அறும் முத்தியாம்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவனடி ஞானமே ஞானம் என்பார்"

என்றதனல் அறியலாம்.

இவ்வாறு வேதாகம நூல்களை உணர்ந்தோர் கூறுவ தறியாது முத்திக்கு வழி இதுதான் என்று மனம் போன போக்கிற் சென்று வீணில் காலங் கழிப்பவர் என் செய்வார்? அந்தோ! சாகுந் தருவாயில் சங்கரா! சங்கரா! என்று சொல்வதினல் பயன் உண்டாகுமோ?

பாண்டியன் :—ஆ! "யானைக்கும் அடி சறுக்கும்" என்று சொல்லுதற் கிணங்க எவரும் தவறுவது இயற்கை தானே. அப்படித் தவறிய ஒருவன் தான் செய்த பாவ கர்மங்கள் விலகுதற்கு இன்னது செய்வதென்று அறியாமல் வேறு பரிகாரங்கள் செய்தாலும் அவற்றாற் பயனில்லை எனப் புலப்படுகின்றனவே.

பரசு :—கொஞ்சம் பொறுங்கள். எல்லாம் இதனுடன் முடிந்ததா? இல்லை. மனித வாழ்க்கை மிகவும் கடின மானதுதான். ஒவ்வொருவனும் "வெள்ளம் வருமுன் அணைகோல வேண்டும்" என்பதற் கிணங்க மரணமாகிய வெள்ளம் நம்மை மோதி அடித்துப் போகுமுன் காலங் கடத்தாமல் முத்தி அடையும் வழியை நாடுவது இன்றி யமையாதது. "முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்" என்றிருப்பினும், எந்தக் காரியமும் இறைவர் திருவருளால் முற்றுப்பெறும் என்னும் முழு நம்பிக்கையுடன் நிற்க வேண்டும். பாவச் செய்கையால் கெட்டுப்போன நமது உள்ளமாகிய நிலத்தை ஈசன் திருவாக்காகிய கொழுவினால் உழுது, அதில் அன்பு, பொறுமை, பிறரைக்காத்தல், முதலிய விதைகளை விதைத்து, தீய குணங்களாகிய களை களைக் களைந்து ஆண்டவரது அருள் மாரியால் அவை செழித்துத் தழைத்து பிறர்க்கும் நமக்கும் பயன் படுமாறு வழிதேடவேண்டும். "நம்மை உண்டாக்கிய நாயகருக்குக் கண்க ளில்லையா? அவர் எல்லாவற்றையும் படைத்தவர். எல்லாவற்றையும் காப்பவர். எல்லாவற்றையும் நிலை நிறுத்துபவர்" என்று நம் மனத்தை உறுதிப் படுத்தி மனம் போன போக்கில் போனால் பெரும் குற்றத்துக்கும் பெருந் தண்டனைக்கும் ஆளாவோம் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

பாண்டியன் :—நல்லது இருக்கட்டும் எப்போது பர மான்மாவை நம்மெல்லோருக்கும் காரண மென்றீரோ அப் போது அவர் சின்னங்களாகிய நாம் பிறர் செய்த குற்றங் களை மன்னித்து, மன்னுயிரை நம்முயிராக நினைத்து, நம்முடைய காரணரைச் சேரத் தடையாக இருக்கின்ற தீய பழக்கங்களை அகற்றி நல்லவழியில் நடப்போமே யானால் நாம் முத்தியடைவது உண்மைதானே.

பரசு :—தாங்கள் கூறுவது உண்மையே. ஒவ்வொரு வரும் இகத்தில் செய்த நன்மை தீமைகளுக்கு ஏற்றவாறு பயன் அடையாமற் போவ தில்லை என்று அறிகிறோம். அவ

ரவர் செய்யும் கருமங்களுக்காக இறைவரை யடைந்து மனங் கசிந்து தம் குற்றங் குறைகளை எடுத்தோதுவதே நல மென்றுரைத்தீர்கள். ஆயினும் நாம் புரிந்த பாவகர்ம பலன்கள் தாமே விலகிவிடு மென்று வாளா இருத்தல் பெரும் பிழையாகும். ஆதலால் உத்தம இலட்சணங்களை அடையவும், பாவ கருமங்களினின்று விலகவும், இறைவரை நோக்கவும் முயற்சி யுடையவர்களா யிருத்தல் வேண்டும்.

பாண்டியன் :—ஏன் அவ்விதம் சொல்லுகிறீர்கள்? நாள்தோறும் எண்ணிறந்தவர்கள் குளக்கரையிலும், தேவ சந்நிதியிலும், காலையிலும் மாலையிலும் நின்றுகொண்டு வழிபாடு செய்வதைப் பார்த்ததில்லையா? இவற்றை நீங்கள் கவனிக்கவில்லை போலும். ஆகவே நீங்கள் சொல்லும் இக்காரியத்தை எவர்தாம் நம்புவார்?

பரசு :—இவ்வளவுதானா! நானும் பலவாறாக நினைத்து விட்டேன்; இதோ நான் சொல்வதைக் கவனியுங்கள். ஐயா! ஜபம் செய்கிறவர்களில் ஒரு திறத்தார் எப்போதும் ஜபமாலையைக் கையில் தாங்கிப் பக்தி வைராக்கிய முடையவர்போல நடித்துப் பல விரதங்களைக் கைக்கொள்ளுபவராயும், ஏழைகளுக்கு ஆடம்பரத்துடன் அன்னமிடுபவராயும், பிறர் தம்மை மதிக்கச் செய்யும் இவைகள் எல்லாம் வெளி வேடமே யன்றிப் பிறிதில்லை. அவர்.

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்ற திருக்குறளைக் கவனித்து நடப்பாராயின் சால நலம் பெறுவர்.

மற்றவரோ என்றால், ஈசன் தம்மை நடத்துவதறியாமல் சந்தோஷ காலங்களில் சங்கீதம் பாடுவதும், அல்லல் மிகுந்த காலங்களில் ஓலமிட்டு "ஐயோ, தெய்வமே! உனக்குக் கண் இல்லையா? காதில்லையா? உன் நெஞ்சம் கல்லா? இரும்பா?" என்று கதறுவதும் செய்வார்கள்.

பாண்டியன் :—நீங்கள் என்றும் வேடிக்கையாகத் தான் பேசுகிறீர்கள். இப்படியே நாம் பேசிக்கொண்டிருந் தால் பின்பு எவ்விதந்தான் ஒருவன் ஈடேறுவது? இப்பொ ழுது நேரம் அதிக மாகிவிட்டது. உங்க ளில்லமும் அதிக தூரத்தில் இருக்கிறது. உங்களைக் காக்க வைக்க எனக்கோ மனமில்லை. ஆகையால் நாம் இதை இதனுடன் முடித்து விடுவது நலமாகும். இது வரையிலும் என்னுடன் தனித் திருந்து உரையாடியதற்காக அநேக வந்தனம். எனக்குத் தெரியாததும் உண்மையிற் கண்டறிந்தது மாகிய பல காரி யங்களை உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காண்பித்தீர்கள். நிற்க, தங்களால் கூடுமானல் முத்திக்கு வழியை உணர்த்தப் பணிவாய் வேண்டுகின்றேன்.

பரசு :—இதென்ன! நீங்கள் கேட்கும் இக்கேள்விக்கு நான் எவ்வாறு பதில் கூறுவது? இத்தகைய கேள்வி எளிதானதா? இதை எல்லோரும் அறிந்திருந்தால் அப் போதே அவர்க்கு நற்கதி கிடைத்துவிடுமே. இக்கேள்வி களைப் பெரியோர்களிடம் கேட்டால் அவர்கள் நமக்குத் தெளிவாய் உணர்த்துவார்கள். நான் என்ன கற்றறிந்த புலவனே? அரிய வேதாந்த நூல்களை ஆராய்ந்த நிபுணனே? இதற்குமுன் தங்களைப் போன்ற பெரியார் பலரை நண்பர் களாகக் கொண்டவனே? அல்லது வேத நூல்களைப் படித் துணர்ந்த பெரியோர்களை அடுத்து ஆராய்ச்சி செய்தவனே? இவற்றுள் ஒன்றுயினு மில்லையே. ஆயினும் தாங்கள் கேட்ட படியால் எனக்குத் தெரிந்தமட்டில் சொல்லுகிறேன், கேளுங்கள். நண்பரே! மானிடர் ஒவ்வொருவரும் அறிய வேண்டிய காரியம் சில உண்டு. அவைகளில், அவர்கள் தமக்கு பயன்படத் தக்க பல நன்மைகளைக் கைக்கொள்ள வும், மாறு யுள்ளவைகளைப் புறம்பே தள்ளி விடவும் வேண்டும். முதலாவது, ஒருவர் செய்த குற்றத்தை மன மாற மன்னியாது வர்மமாக மனத்தில் வைக்கக் கூடாது. கோபத்துடன் சீறி விழுந்து பேசுகிறதும், காரண மின்றி ஒருவரைக் கடினமாய் நடத்துகிறதும், மனம் புண்பட ஏசுகிறதும் கொலைக்கு ஒப்பானதால் அச்செய்கைகளை

நாளடைவிற் குறைத்துக்கொண்டே வரவேண்டும். அவ வாறே பிறருடைய வீட்டின் செல்வாக்கையும் பொருளையும் கண்டு பொறாமைப் படுவதும், பொய்ச் சாட்சி கூறுவதும் பெருந் தீய கருமமா யிருப்பதால் அவைகளைப் பெரும் பகை யாய் நினைந்து விட்டுவிடல் வேண்டும். பெற்றோர்களை மறவாது ஆதரிக்க வேண்டும். பெரியோர்களையும், ஆசிரியர் களையும் வணங்கி மரியாதை செய்வதும், எஜமானர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அடங்கி நடத்தலும் வேண்டும். அரச னுக்கும் அவன் அதிகாரம் பெற்ற ஊழியர்க்கும் கீழ்ப்படிய வும், அரச சட்டத்தை மேம்படுத்தவும், அரசர்க்குயர் அர சாகிய எல்லாம் வல்ல இறைவரை பக்தியுடன் வணங்கி நடக்கவும் முயல வேண்டும். இவ்வாறு நடந்து வருவோ மாகில் நமக்கு முத்தி சீக்கிரத்தில் சித்திக்கு மென்பதில் ஐயப்பா டில்லை.

பாண்டியன் :—இவைகளெல்லாம் மிகவும் முக்கியமாய் ஒவ்வொருவரிடத்திலும் காண வேண்டிய விலை யுயர்ந்த மாணிக்கங்கள் என்று சொல்லத் தடையில்லை. இவை போதுமோ, இவற்றைவிடக் குறுக்குவழி ஏதேனும் உண்டோ ?

பரசு :—ஆம், இதற்கு ஒரு குறுக்கு வழியும் உண்டு. அதாவது, எவனொருவன் தன் மனதை யடக்கிக் கடவுளி டம் தன்னுடைய பாவங்களுக்கு வருந்தி அவர் திருவடியின் முன் மன்றாடிப் பழைய தீய வழிகளை யெல்லாம் துறந்து புதிய நல்வழியில் வருவானோ அவனுக்கு அப்போதே முத்தி கிடைப்பது நிச்சயம். அல்லாமலும், இந்தப் பூவுலகின் மாயை யனைத்தையும் துறந்து எவன் தன் வாழ்நாளைச் சீராகக் கழிப்பானோ அவனது பாக்கியமே பாக்கியம். அவ னுக்குப் பரமபதம் கைகூடும் என்பதற்கோர் ஐயமுமில்லை.

பாண்டியன் :—நல்லது, நான் நினைத்த காரியம் கை கூடிற்று. சுருங்கச் சொல்லின், மனத் தூய்மை வேண்டும் என்று கண்டேன். அதை விட்டு, நாம் வேள்வி செய்வ தாலும், புண்ணிய நீராடுவதாலும், தல யாத்திரை செய்வ

தாலும் பயனென்று மில்லை யெனக் கண்டேன். ஆகையால், அருட் பெருங்கடலாகிய கடவுள் உலக மனைத்தும் கெடாது ஈடேறும்படி துணை நின்று காப்பாற்ற நாடோறும் துதிப்போமாக. நண்பரே! "காலை நேரம் நல்ல நேரம்; நமது மனம் களங்கமற் றிருக்கும்; அப்பொழுது துதிப் பார்க்கு ஆண்டவரும் அருள் புரிவார்" எனப் பெரியார் கூறுகின்றனரே. ஆகையால், காலை நேரமோ, உச்சி நேரமோ, மாலை நேரமோ, எந்த நேரம் நல்ல நேரம்? தயை செய்து சொல்லுங்கள்.

பரசு :—இப்போது நீங்கள் குறித்த நேரங்களில் எந்த நேரமும் நல்ல நேரமன்று. நாம் நினைத்த நேரமே நல்ல நேரம். நாளைக்குச் சீர்ப்படுவோம் என்று நினைப்பது கூடாது. இன்னும் போதுமான வயது வரவில்லையே என்றும், சில நாட்கள் கழிந்த பிறகு இறைவரிடம் நமது குற்றங் குறைகளைச் சொல்லி மன்னிப்புப் பெறலாமென் றும் நினைப்பது தகுதி யன்று. நம்முடைய நாளும் நம னுடைய நாளும் இன்ன வென்பதை நாம் அறியோம்! இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்ப ரென்று எண்ணவோ திடமில்லை. ஆகையால் நல்வழி யடைய இதுவே தகுந்த காலமென மனந் திரும்பி இன்புற்று வாழ முயலுவோமாக. இதை விட்டுக் காலங் கடத்தி வேறு வேறான வழிகளைக் குறித்து வாணாளை வீணாளாகக் கழிப்போமாகில் நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும். அச்சமயம் நாம் இருதலைக் கொள்ளி எறும்பு போல் வருந்துவோம். ஆனதுபற்றி, நமது வாழ்நாட்களை நல்ல நெறியிற் கழித்துப் பரமனைச் சிந்தனை செய்து ஈடேறுவது இன்றியமையாத சாதனமாகும்.

பாண்டியன் :—தாங்கள் என்னுடன் பேசியவை அனைத் தும் மிகவும் அரிய விஷயம். இவற்றைத்தாம் ஒவ்வொரு வரும் கண்டறிதல் வேண்டும். தாங்களும் மெய் வருத்தம் பாராது இது வரையிலும் இவ்வருமையான காரியங்களை உணர்த்தியதற்காக நான் நன்றி பாராட்டக் கடமைப்பட் டுள்ளேன்.

பரசு:—நண்பரே! நாம் இன்று பேசியதன் மெய்ம்மைப் பொருள் என்னவெனில், உலகில் எவனும் முன் செய்த வினையாற் பிறந்தவனாகையால் அவன் உலகிற் கேற்ற காரியங்களையும், மற்றைய புண்ணிய கருமங்களையும்,

"கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன் றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே?"

எனப் பட்டினத்துப் பிள்ளையார் கூறியிருப்பது போல, ஒழுங்காகச் செய்வதாக நினைப்பதற் கில்லை. இத்தன்மையுடையவன் ஆயுள் முழுவதும் பாம பக்தனைப் போல நடித்துக் காலங் கழித்து வருவானாகில் அவன் எக்காலத்தும் நற்கதி யடையப்போகிற தில்லை. இவ்வழியில் நடப்போமாயின் நமக்குப் பரகதி எங்ஙனம் கிடைக்கும்? ஆகையால் நன்மை இன்னது தீமை இன்னது என்று பகுத்தறிந்து, தீமையை விடுத்து நன்மையைக் கைக்கொண்டு நடத்தல் வேண்டும். இவ்வாறு யாவையும் அறிந்து நெறி தவறாது நடக்கின்ற போது நன்மை பெறுவோம் என அறிந்து கொள்வோமாக. அவ்வண்ணம் நடக்கின்ற மானிடர்கட்கு இறைவர் கருணையை மாரியாக அன்னவர்மீது பெய்கிறார் என்பது உண்மையாகும்.

இவ்விதம் நெடுநேரம் உரையாடிய பின்னர் பரசுராம பிள்ளை பாண்டியனிடம் விடைபெற்றுத் தம் இருப்பிடம் சென்றார்.

---

# அத்தியாயம் 3.

வளர்பிறைச் சந்திரன் நாட் செல்லச் செல்ல எவ்விதம் களங்க மற்று ஒளி நிரம்பித் தோன்றிக் காரிருளைப் போக்கி உலகிற்கு உதவுகின்றதோ, அவ்விதமே இவ்வுலகம் தன் உதவி பெற்று இன்புற்று வாழப் பாண்டியன் துலங்கினன். இரு ளடைந்திருக்கும் மானிடர் உள்ளத்தைத் தன் ஞான ஒளியால் விளக்கி வந்தான். அன்னன் யாதொரு அல்லலு மின்றிச் சுகத்திலும் செல்வத்திலும் காலங் கழித்து விளங்கினன். குறை வென்ப தின்றி யாவும் அவனுக்கு நிறைவாகவே இருந்தன. அஞ்சாத வீரர்களெல்லாம் மித்துரு வாகி ஆவினம் போல் அவனை அடைந்தனர். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பதற்கேற்ப படித்தறிந்த சில நண்பர்கள் அவனைச் சார்ந்திருந்தனர். இவைகள் போக, ஒருவனுக்குக் கல்வியே முக்கியம் என்றும் கல்வியைவிடச் சிறந்த செல்வம் இல்லையென்றும் அவன் கண்டறிந்தான். ஆனது பற்றி, கல்வியை விருத்தி செய்ய வேண்டுமெனக் கருதி அவன் அருமையான பல ஆராய்ச்சிகளைச் செய்துவந்தான். எந்நேரமும் பண்டிதர்களுடைய உறவும், ஞானிகளுடைய நட்பும் அன்னனிடம் இருந்துகொண்டே வந்தன. இது நிற்க, அவனுடைய அருள் அமர்ந்த பார்வையும் மானிடர்களை மயக்கின. ஆகவே, அன்னவனைக் காணுமுன் கை கூப்பித் தொழாதார் இவ்வுலகின்கண் எவரு மிருந்திலர். பாண்டியன் என்றால் பாலருந்தும் பாலருங்கூட பாலருந்துவதை விட்டு அவன் முகங் காண விரும்புவர். நன்மணமுடைய புனுகு, கஸ்தூரி முதலிய பொருள்களைப் பொதிந்து வைத்து மூடினும் அவை ஆகாய முழுவதும் கலந்து சகலருக்கும் இன்பத்தை எவ்வாறு அளிக்குமோ அவ்வாறாகவே பாண்டியன் சிற்றூரி லிருந்தாலும் அவன் கொடையும் சிறந்த நடையும் நாற்றிசையிலும் பரவின.

சொந்த ஊராரும் அயல் நாட்டாரும் அவனை நன்கு மதித்தார்கள். சிறந்த பாவலர்களும் அவனைப் புகழ்ந்து பாடிக் களித்தார்கள்.

இவ்வாறு செல்வம், புகழ் முதலியவைகள் அளவின்றியிருந்த போதிலும் பாண்டியன் அவைகளைப் பொருட்படுத்தாது, "இவைகள் யாவையும் தந்தவர் எல்லாம் வல்ல இறைவரே. எளியவனைச் செல்வர்களோடு ஒருங்கிருக்க மேம்படுத்தவும், தனவந்தர்களைத் தரையோடு தள்ளவும் அவராலே ஆகும். அவரால் ஆகாத காரியம் என் உளது"? என்பதை நன்குணர்ந்து நன்மைகள் அனைத்திலும் தான் எவ்வளவு விருப்பு வைக்கலாமோ அவ்வளவுமட்டில் விருப்பு வைத்து, இதர நேரங்களைப் பிறர்க்கென்று செலவு செய்து, அவ்வுலகத்தில் தனக்கு வேண்டிய அழியாப் பொருளைத் தேடி வைத்தனன். ஏனெனில், 'இவ்வுலகம் அநித்தியம், சஞ்சலத்திற் கிடமாயது' என்று கண்டறிந்தான். "இவ்வுலகத்திலே உங்களுக்கு நன்மைகளைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். ஆதலால் மேலுலகத்தில் உங்களுக்கு நன்மைகளைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது அவைகளைக் கெடுக்கிறதில்லை. திருடரும் கன்னமிட்டுத் திருடுகிறதில்லை" என்னும் மறைமொழியை அறிந்தவனாதலால் ஒவ்வொரு நாளும் நன்மையான காரியங்களையே புரிந்து, நன்மையான பேச்சுக்களையே பேசி, நன்மையானவைகளையே மனத்தில் எண்ணிப் பலவிதத்தாலும் நன்மைக்கு ஓர் களஞ்சியமாக விளங்கினான்.

பரோபகார சிந்தையிற் சிறந்து நீதி நெறி தவறாது நின்று, தஞ்சம் புகுந்தாரை அன்பாய் ஆதரிக்கும் இக்குணசீலனது அரிய செய்கையை அறிந்த கடவுள் ஒருநாள் அன்னவனுக்கு ஏற்பட்ட குறையை நீக்கத் திருவுளங் கொண்டார்.

இவ்வுலகின்கண் பாண்டியனுக்கு அளவு கடந்த நிதிகள் இருப்பினும் மக்கட் செல்வம் இல்லாத ஒரு பெரிய

குறை இருந்தது. அதனால் அவன் இல்லம் மதியில்லாத வானமும், தாமரை யில்லாத பொய்கையும், கண் ணில்லாத முகமும், புலவரில்லாத அவைக்களமும் போலப் பொலிவற் றிருந்தது. இவ்வா றிருப்பினும் பாண்டியன் அறிவிற் சிறந்தவ னாதலால் ஏனையோர்களைப் போலத் தாங்கொணாக் கவலை யுற்றுத் தளர்வடையாமல் கவலையை யெல்லாம் தான் வழிபடுங் கடவுள்பா லாக்கிக் காலங் கழித்து வருவா னாயினன்.

இது இவ்வாறாக, ஒரு நாள் பாண்டியன் ஜபம் செய்து கொண் டிருக்கையில், யாரோ ஒருவர் வெண் பஞ்சோ உறைந்த பனியோ என்று ஐயுறத் தக்க வெள்ளிய சட்டை யிட்டுத் தன்முன் நிற்பது போல இருக்கக் கண் டான். அப்போது அவன் திடீரென்று அவர் பேசும் சத்தத்தைக் கேட்டான். "வீரசிங்க பாண்டியனே! நீ இனி சாது துரைப் பாண்டியன் என அழைக்கப் பெறுவாய். ஏனெனில், நீ அதிகப் பொறுமையுடன் உன் வாழ்நாட்களை என்முன் பக்தியாகக் கழித்துவந்தனை. உன்னைப் போன்ற மனிதனை இவ்வுலகிற் காண்ப தரிது. நீயோ, உனக்கடுத்த வரை அன்புடன் கொண்டாடி, அன்னவர் வேண்டும் அள விலாத உதவிகளை அவ்வப்போது உள்ளக் களிப்புடன் அளித்துவந்தனை. நீயே என் உள்ளத்திற்கு உகந்த தாசன். பொறுமை வாய்ந்த குணசீலன். உன்னுடைய பெருங் கொடையையும், ஜபதபங்களையும் என் உள்ளத்திற் கொண் டேன். இப்போது உன்னை மென்மேலும் ஆசீர்வதிக்கச் சித்தம் கொண்டேன். உனக்கு இதுகாறும் யான் யாதொரு விதக் குறைவும் வைக்கவில்லை. எனினும், உனக்கு ஒரு குறை உளது. அதனை நான் போக்குவேன். பதிவிரதை யாகிய உன் பத்தினி ஜீவரத்தினம் அடுத்த ஆண்டு இத்தரு வாயில் ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுப்பாள். அது உனக்குச் சிறந்த குழந்தையா யிருக்கும். அம்மகவானது வெகு அழகுள்ளதாயும், உனக்கும் உன் மனைவிக்கும் ஆறுதலை அளிக்கக்கூடியதாயும், உலகத்தாராற் புகழப்படுவ தாயும் இருக்கும். சிலகாலம் கழித்து ஓர் ஆண் மகவும்

உனக்குண்டாகி உன் குடும்பம் விருத்தியாகும்" என்று அவர் சொல்லி மறைந்து போயினர்.

இவை யாவையும் கண்ணுற்றும் கேட்டுமிருந்த புண்ணிய புருடன் எதோ கனவு கண்டது போல் எழுந்து அடியற்ற மரம்போலத் திடீரென்று நிலத்தில் விழுந்து எழுந்து தலைகுனிந்து இறைவரைப் பன் முறை வணங்கித் துதித்து, தூய மனத்தை யுடைய தனது பத்தினியை அழைப்பித்து நடந்தவைகளைச் சொல்லி, அன்று முதல் அவள்பால் மிக்க அன்புடையவனாய் காலங் கழித்தனன்.

இங்ஙனம் சிலநாட் செல்ல, கடவுள் வாக்குப்படியே குறித்த தினத்தில் அவன் மனைவி பொன் னனைய ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்தாள். அதைக் கண்ட பாண்டியன் ஆனந்தங் கொண்டு இறைவரைப் பன் முறை வணங்கி ஆராதனை செய்து இன்பமுற் றிருந்தான்! குழந்தை பிறந்த மகிழ்ச்சியினால் உயர்ந்த சீனாக் கற் கண்டையும், வாசனை மிகுந்த சவ்வாதையும் நண்பர்களுக் கும் தொண்டு புரியும் ஏவலாளர்களுக்கும் கொடுத்தான். பற்பல இடங்களி லிருக்கும் உறவின் முறையார்களுக்கும் அறிமுகமானவர்களுக்கும் கடிதங்கள் வரைந்து தூதர் மூலமா யனுப்பினான். அப்போது உறவினரும் நண்பர் பலரும் வந்து சேர்ந்தார்கள். பின் பெரியார் பலர் முன் வந்து பிள்ளையைத் தூக்கி இரத்தினாவதி என்று பெயரிட்டு வாழ்த்தினார்கள். இவைகட்குப்பின் ஓர் அழகிய தொட்டி யில் குழந்தையை ஏற்றி, வயதில் மூத்தோர் மதலையை வாழ்த்த, மாதர்களிற் சிலர் மங்களம் பாடி மல்லிகை தூவ, வயது முதிர்ந்த கிழவிகளில் அனேகர் முன் வந்து "மானே! மரகதமே! மாணிக்கமே! கண்ணுறங்காய்" எனப் பாராட்டித் தாலாட்டினார்கள்.

தம் அரும் புதல்வியின் பொருட்டு நடக்குங் காரியங் களைக் கண்ணுற்ற பாண்டியன் ஒருபுறம் வியந்தும், மற் றொரு புறம் வெறுத்தும் வாளா விருந்தான். அப்போது அப் பெருமான், "இது என்ன அதிசயம்! உலகத்தில்

எத்தனையோ குழந்தைகள் இருக்கின்றன. நாமும் இது வரையில் எத்தனையோ சிசுக்களைக் கண்டிருக்கிறோம். அவைகளை விட நம் குழந்தை என்ன அவ்வளவு சிறந்ததா? ஏனைய மகவுகள் போலத்தானே நமது மகவும் தாய் வயிற்றில் ஈரைந்து திங்களிருந்து பிறந்தது. மேலும் இதர குழந்தைகளுக்குள்ள இலட்சணங்கள்தாமே இதற்கும் இருக்கின்றன. அவ்வித மிருக்க ஊராரும் நாட்டாரும் உறவின் முறையாரும் இவ்விதமாய் வாழ்த்த என்ன காரணம்? இதுவரையில் அவர்கள் செய்த அத்தனை காரியங்களுக்கும் அக்குழந்தைதான் ஏற்றதா? அல்லது அதை ஈன்றெடுத்த நாம்தாம் ஏற்றவரா? இது மனிதர் முற்காலங்களில் புரிந்த நன்மையின் பயனாலும் கடவுள் அருளாலும் உண்டானதே தவிர வேறொன்று மில்லை. சுமார் இரண்டுமணி நேரமாக நாம் கேட்ட யாவும் நமக்கேற்ற தன்று. ஆனால் இவை யாவையும் காதாரக் கேட்கவும், கண்ணாரக் காணவும் கிருபை தந்து, நம்மை இது வரையிலும் குறைவின்றிப் பாலித்து வரும் தூங்கனார்க்கே அது மங்களமாகுக'' என்று கடவுளைத் துதி செய்தான். அதன்பின் பாண்டியன் தன் மனைவியை வந்த பேர்களுக்கு விருந் தளிக்குமாறு கூற, அம்மங்கையும் முகமன் கூறி விருந்தினரை உபசரித்தனள்.

பாண்டியன் வீட்டிற்கு வந்திருந்த பந்துக்கள் எல்லோரும் சில நாட்கள் வரையிலும் அவ்விடத்தே தங்கியிருந்து மீண்டும் தம்தம் இல்லங்களுக்குத் திரும்பிப் போனார்கள்.

---

## அத்தியாயம் 4.

பிறவியிலேயே கண் பார்வை யற்றுத் துன்பம், வறுமை முதலியவைகளால் வருந்திக்கொண்டிருந்த ஒருவன் திடீரென்று இரண்டு கண்ணும் பழுதின்றிப் பார்வை அடைவானே யாகில், அப்போது அவனுக்கு உண்டாகும் மகிழ்ச்சிக்கு வரம்பு கூற யாரால் இயலும். அவ்வண்ணமே பாண்டியனும் அநேக ஆண்டுகளாக மக்கட்பேறு இல்லாமல் மனங் கலங்கினாலும் இப்போது இரத்தினவதியின் பிறப்பினால் அளவு கடந்த மகிழ்ச்சி கொண்டான். அம்மகவை நாடோறும் நீராட்டி நல்ல ஆடை உடுத்தி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கண்ணை இமைகள் காப்பதுபோல் பெற்றோர்கள் காத்து வந்தார்கள்.

> "குழவி தளர்நடையைக் காண்டல் இனிதே அவர்
> மழலை கேட்டல் அமிழ்தி னினிதே"

என்னும் உரைக்கிணங்க இரத்தினவதியின் தளர்நடையைக் கண்டும், மழலைச் சொற்களைக் கேட்டும் பெற்றோர் ஆனந்தக் கடலில் மூழ்கினர்.

இஃதிவ்வாறு இருக்கையில், முன்பு முனிவர் சொன்ன மொழிப்படி பாண்டியனுக்கு ஒரு ஆண் மகவும் நன்னாளிற் பிறந்து அருமைப் புதல்வி இரத்தினவதியோடு வளர்ந்து வந்தது.

இவ்வண்ணமாக நாட்கள் கடந்து இரத்தினவதிக்கு நான்கு ஆண்டுகள் நிரம்பின. இனி இவ்வருமை மகட்குக் கல்வி கற்பிப்பதைக் குறித்து பெற்றோர் சிந்தனை செய்தார்கள். ஏனெனில், எத்தகைய செல்வ மிருப்பினும் ஒருவனுக்குக் கல்வி யில்லாது போமேயாகில் அவன் எளியவனாகவே கருதப்பெறுவான் என்றும், செல்வங்களில் அழியாத செல்வம் கல்விச் செல்வம் ஒன்றே என்றும், கல்வியே அன்பு, இரக்கம், ஒழுக்கம் முதலியவைகளைத் தருவது என்றும் அவர்கள் நன்குணர்ந்தனர்.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்றனர் ஆன்றோர். ஆதலால் குழந்தை வளரும் பருவத்திலேயே கல்வியை புகட்டுவது நலமென அவர் கருதினர். ஆனால் நம்மிற் பலர் இத்தனை சீக்கிரம் பெண் குழந்தைக்குக் கல்வி கற்பிக்காவிட்டால் என்ன காரியம் முழுகிப் போய்விடும்! நமது குழந்தை தன் கண்ணினால் கண்டதைச் செய்யவும், காதினால் கேட்டதைச் சொல்லவும் திறமையுள்ளதாயிருப்பதால், தன் சுய அறிவினால் யாவற்றையும் அறிந்து கொள்ளும்; ஆகையால் அதற்கு ஒரு ஆசிரியர் வேண்டுவதில்லை" என்று சொல்வதுண்டு. ஆனால் பாண்டியன எவற்றையும் நன்குணர்ந்தவனாகையால்,

"மூப்பிலாக் குமரி வாழ்க்கை முனையில்லா அரசன் வீரம்
காப்பிலா திருந்த பூமி கரையிலா திருந்த ஏரி
கோப்பிலான் கொண்ட கோலம் குருவிலான் கொண்ட ஞானம்
ஆப்பிலாச் சகடுபோல அழியுமென் றறியலாமே"

என்பதை நன்குணர்ந்து, தனது அருமை மகள் ஏனைய குழந்தைகளைவிட அதிக ஞானம் பெற்றிருப்பதை அறிந்தும் "சுடர்விளக்கே யாயினும் தூண்டுகோ லொன்று வேண்டும்" என்னும் முதுமொழியைச் சிந்தித்து அந்த இளம்பிராயத்திலேயே அவளுக்கு கல்வி கற்பிக்க விரும்பினான்.

அம்மகளோ எனின், அடக்கம் உள்ளவள். இளம் பிராயத்தினள் எனினும் அன்பு, இரக்கம், கீழ்ப்படிதல் முதலியவைகளிற் சிறந்தவள். கண்ணினாற் கண்டதைச் செய்யவும், காதினாற் கேட்டதைச் சொல்லவும் கூடிய திறமை வாய்ந்தவள். அவ்வா றிருப்பினும் தன் மகளை விளையாட்டிற்கும் வேடிக்கைக்கும் இடங் கொடாது 'பருவத்தே பயிர்செய்' என்பதற் கிணங்க காலத்திலே கல்வி கொடுக்க எண்ணிய அப்பெற்றோர்களின் மாண்பு சொல்லற் கரிதாகும்.

ஒருவன் கல்வியையோ அல்லது தொழில் முறைகளையோ கற்கத் தொடங்கும் முன் அவைகளைத் தனக்கு

முறையுடன் கற்பிக்க ஆசிரியர் ஒருவரைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். அவ்வாசிரியரை அந்த மாணவன் துணையாகக்கொண்டு தான் கற்பதைக் கசடறக் கற்றுத் தேர்தல் இலகுவாயிருக்கும். அன்னவர் தம் கையின்கீழமைந்த மாணவனைச் சரியான வழியில் திருத்தவேண்டும். இவ்வாறன்றி எவன் கல்வி பயில முயலுவானோ அவன் நன்மை அடைவான் என்று கூற இடமில்லை. ஆசிரியரின்றித் தன் மனம் போனபடி அவன் கற்று மேலும் மேலும் கோணலான வழிகளிற் செல்வானேயானால் அவனுக்கு என்ன பயனுண்டாகும்? தளகர்த்தனின்றிப் போர்புரியும் படையும், பாகனின்றி நடக்கும் யானையும், பெற்றோர் கண்டித்து வளர்க்காத பிள்ளையும், மாலுமியின்றிச் செல்லும் மரக்கலமும் போல அம்மாணவனும் பிழைகளுக்குள்ளாகிப் பயன்பெறுதொழிவான் என்பதைப் பாண்டியன் தீர அறிந்தவனாதலால் தன் செல்வப் புதல்விக்குக் கல்வி கற்பிக்குமாறு கணபதி முதலியாரை அழைத்தனன்.

கணபதி முதலியார் நூல்கள் பலவும் நன்கு அறிந்தவர். கலைஞானங்களிலும் தீவிர ஆராய்ச்சி பெற்று அவையனைத்தும் ஒருங்கே அகத்தில் அமையப் பெற்றவர். மேலும், கடவுள் அருள் நிறையப் பெற்றவர். இவ்வித உத்தம குணத்தில் ஈடுபட்டு நிற்கும் முதலியாரைத் தன்னில்லம் அழைக்க, அவரும் பாண்டியன் வேண்டுகோளின்படி தம்மை அழைக்க வந்த வாகனத்திலேறி அவன் இல்லம் அடைந்தார். அன்று முதல் அவர் இரத்தினவதிக்குச் சிறந்த ஆசிரியராக ஏற்பட்டார்.

வீடுகளில் சிறு பிள்ளைகள் வேற்று மனுடர்களைக் காணுமளவில் அச்சங் கொண்டு ஓட்டம் பிடிப்பார்கள். ஆகையால், தாம் உபாத்தியாயராய் வந்தது இரத்தினவதிக்குத் தெரிந்தால், எங்கே அழுது நிலத்தில் விழுந்து பெற்றோர்க்கு வருத்தத்தை மூட்டுவாளோ என்னும் நினைவினால் முதலியார் முதல் முதலாக மாணவியை நோக்கிப் புன்னகையுடன் "அம்மா, நீ சிறு குழந்தையாயிருப்பினும் நல்ல குழந்தையாகக் காணப்படுகிறாய்; இன்னும்

உன்னை நல்ல பிள்ளையாக்கவே நான் இங்கு வந்திருக்கிறேன். உனக்கும் அது விருப்ப மென்றே நினைக்கின்றேன். குழந்தாய்! 'இளமையிற் கல்' என்று ஆன்றோர் கூறுவதால், நீ கல்வி பயிலுவதற்கு ஏற்ற காலம் இதுவே. ஆகையால் நீ தினமும் சிறிது சிறிதாக நான் சொல்வதைக் கவனமுடன் கற்று தெரியாதவைகளை என்னிடம் கேட்டுத் தெரிந்துகொள். அதன் பின்பு நீ படித்தவை யாவும் மனத்தில் நிலைபெறு மாறு உன் தோழிப் பெண்களுக்குச் சொல்லிக் கொடு. இவ்வாறு செய்வாயாகில் நீ படிக்கும் பாடங்கள் யாவும் செவ்வனே உன் மனத்திற் பதிந்துவிடும். அன்றியும், நீ எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக நடக்க முயலு. பெரியோர்களுக்கு அடங்கி நடந்துவர உனக்கு நான் கண்டிப்பாய் உத்தரவு செய்கிறேன். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து, காலைக் கடனை முடித்து, தலையில் எண்ணெய் பூசிச் சடை பின்னி சுத்த உடையை உடுத்திக்கொண்டு, பள்ளிக்கூடத்திற்குப் போதல் வேண்டும். பள்ளிக்கூடம் செல்வதற்கு முன் சென்ற இரவில் நீ படித்த பாடங்களை மறுபடியும் படித்து உன் ஞாபகத்துக்கு கொண்டுவருவாயாக. படிக்கும் பாடங்கள் ஒவ்வொன்றையும் ஒழுங்காகவும் கிரமமாகவும் படித்து நன்மை பெறுவாய்" என்று கூறினர்.

உபாத்தியாயர் கூறியவைகளைச் செவியிற் கேட்டு இரத்தினவதி அகமகிழ்ந்து, "ஐயா! தாங்கள் மொழிந்தவைகளைச் சிரமேற் கொண்டேன்; நாடோறும் அவைகளை வழுவாது செய்துவருவேன்" என, ஆசிரியர், "அம்மணி! உனது ஒழுக்கம், அடக்கம் முதலியவைகளே உன்னை மேலான நிலைமைக்கு நடத்தும்; கலைமகள் உன்னில் வசிக்கிருள்; இலக்குமிக்கு நீயே சேயாய்க் காணப்பெறுகின்ருய்; இவ்வகையான நலன்கள் இருப்பதனல் கலைகளைக் கற்று முன்னேற்ற மண்டைவாயாக" என்று ஆசி கூறினர்.

இவ்வாருக நாட்கள் செல்லச் செல்ல இரத்தினவதி கலைகளைக் கசடறக் கற்று முன்னேற்ற மடைந்துவந்தாள். ஆசிரியர் அவளுடைய உயர்தரக் கல்வியின் காரணமாக

யாது செய்வதென்று சிந்திக்கலானார். அவர் அச்சிறுமிக்கு ஆங்கிலமும் கற்பிக்க அவாவுற்றார். பாண்டியனும் அன்றுமுதல் ஆங்கிலம் பயிற்றுவிக்க யாது செய்வது என்று சிந்தித்து அதன்மீது நாட்டங்கொண்டிருந்தான். இவ்வாறிருக்க, ஆங்கு புதிதாக ஏற்பட்ட ஆங்கில கலாசாலை ஒன்றில் அவளை விடுத்து கல்வி கற்பிக்க அவாவுற்றான்.

இரத்தினவதி குழந்தையேயாயினும் ஏனைய பிள்ளைகளைப்போல் விளையாட்டுக்கும், வீண் காலப்போக்கிற்கும், சோம்பேறித்தனத்திற்கும் சிறிதும் இடங்கொடாது அதிகாலையிலேயே படுக்கையை விட்டு எழுந்திருப்பாள். எழுந்த பின்னர் கிரமந் தப்பாது காலைக் கடன்களை முடித்துப் பல் துலக்கி மூழ்கித் தலையைப் பின்னிச் சுத்தமுடன் இருப்பாள். பின்பு புத்தகமும் கையுமாகச் சிறிதுநேரம் ஓரிடத்தில் அமர்ந்திருப்பாள். பள்ளிக்குப் போகும் வேளை வந்ததும் அன்னையால் அளிக்கப்பெறும் அமுதை அருந்துவாள். இஃதிவ்வாறிருக்க அவள் ஏறிச் செல்லும் வண்டியும் வீட்டின் முன் காத்து நிற்கும். அப்போது அவள் தன் அன்னையிடமேகி, "அம்மா! மணியாகிவிட்டது; வண்டி வெளியில் நிற்கிறது; நான் பள்ளிக்கூடம் போய் வரட்டுமா?" என்று கேட்டுத் தாயின் விடை பெற்று அதிக ஒழுக்கமுடன் வண்டியிலேறிப் பள்ளிக்கூடம் சென்று வருவாள். இவ்வாறாக அவள் எவ்விடத்திற்குச் சென்றாலும், மறுபடி இல்லிற்குத் திரும்பி வந்தாலும் பெற்றோரிடம் செய்தி சொல்லி வருகிற பழக்கம் அந்தச் சிறுவயதிலேயே ஏற்பட்டது. இது நிற்க, அவளுடைய சிறந்த குணம், நற்பழக்கங்கள் முதலியன யாவும் கிளைகளாலும், நெருங்கிய நண்பர்களாலும், ஆசிரியர்களாலும் "நல்லவள்" என்ற ஓர் சிறப்புப் பெயரை அவள் புனையுமாறு செய்தன.

அவள் மாலை நேரங்களில் வெளியே ஓடியாடித் திரியாமல் தன் தம்பி அழகிரிதாசனுடன் சேர்ந்து வீட்டின் பின்புறத்தில் உள்ள சிறு பூந்தோட்டத்தின் நிலத்தை நன்றாய்க் கொத்திப் பண்படுத்தி, செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சி

மலர்களின் நறுமணங்களை மோந்து மகிழ்ச்சியுடன் சிறிது நேரம் போக்கி வருவாள். மாலை மயங்கும் வேளையில் கால் கரங்களைச் சுத்தம் செய்து, முற்கூடத்தில் ஏற்றப்பட்டிருக்கும் விளக்கண்டை அமர்ந்து பள்ளிக்கூடத்தில் அன்று படித்த தன்னுடைய பாடங்களைப் படிப்பாள். அதன் பின்னர் தன் தம்பி அழகிரிதாசனுக்குத் தெரியாதவைகளைச் சொல்லிக் கொடுப்பாள். பாடம் படித்து முடிந்தவுடன் ஜீவரத்தினம்மாள் ஓர் அழகிய பொற் கிண்ணத்திற் சாதத்தைப் பாலுடன் பிசைந்து இருவருக்கும் ஊட்டுவாள். பின்னர் இரத்தினவதி சிறிது நேரம் நிலவு வெளிச்சத்தில் விரித்திருக்கும் பிரம்புப் பாய்களின் மீது உட்கார்ந்து அழகிரிதாசனுக்குப் பல சிறு கதைகளைச் சொல்லிவருவாள். இன்னும் வேடிக்கையாகச் சில சிறு விடுகதைகளைக் கூறி விளையாடிக்கொண்டு அவள் இரவு ஒன்பதரை மணிக்குப் படுக்கைக்குப் போவாள்.

இப்படியாக மணி தவறாது தன் வேலைகளை முறையாகச் செய்து வரும் நாட்களில், ஒருநாள் இரவு ஒன்பது மணி யிருக்கும். அப்போது தோட்டத்தி லுள்ள பூக்களின் நறுமணம் தென்றற் காற்றால் அடிபட்டு முற்றத்தைத் தாண்டி அங்குள்ளவர்களுக்கு மனமகிழ்ச்சியை உண்டு பண்ணிற்று. அப்போது இரத்தினவதி தாசனை விளித்து, "தம்பி! ஏன் உனக்கு இத்தனை சீக்கிரம் தூக்கம் வருகிறது? என்னுடன் ஏன் உரையாடவில்லை?" என்று கேட்க, சிறுவன், "என் அருமை அக்காள்! உன் மீது எனக்கு யாது வருத்தம்? அப்படி யொன்று மில்லை. தென்றல் வீச, பூக்களின் நறுமணம் மகிழ்ச்சியை உண்டு பண்ண, அப்படியே மெய்ம் மறந்து தூங்கிவிட்டேனே தவிர வேறொன்று மில்லை" என்பதாகப் பதில் கூறினான்.

இதனை யுணர்ந்த இரத்தினவதி களிப்புற்றவளாய் மறுபடியும் அவனை நோக்கி, "தம்பி! அதோ வானத்தில் தோன்றும் சந்திரனைக் கண்டாயோ? அதன் ஒளி, இலட்சணம் இவைகளை நன்கு கவனித்தாயா?" என்று கேட்டாள். அவைகளைச் செவியுற்ற தாசன், "என்ன அமைப்பு!

என்ன வியப்பு! அவ்வான மண்டலத்தில் அது எவ்வளவு சிறப்பாய் தோன்றுகிறது! வீடுதோறும் அந்தி நேரங்களில் விளக்கேற்றுவதுபோல் இதுவும் ஏற்றப்படுகின்றது. அதில் ஏதேனும் இருப்பு இயந்திரம் உண்டா? அல்லது அதனை நடத்துபவர் யார்? ஒருவருமில்லையே. எனினும், அது அன்று கடவுளாற் கொடுக்கப்பெற்ற ஆணையின்படி முறை தவறாது தன் வேலையைச் செய்துவருவது எனக்கு மிகுந்த வியப்பைத் தருகிறது!'' என விடை பகர்ந்தான்.

சிறுவனா யிருந்தும் புத்தியுடன் இத்தகைய காரியங்களைச் செவ்வனே எடுத்துரைத்த தன் தம்பியின் நுட்ப புத்தியை மெச்சிக் கொண்ட மாது, ''தம்பி! உனது திறமை இன்று புலப்பட்டது; இன்னும் இது சம்பந்தமாக நாம் அறியக்கூடியவைகள் மிகப் பல இருக்கின்றன. எல்லா நன்மைகளையும் கொடுத்துவருகிற கடவுளின் செயல் மிகவும் வியக்கத் தக்கதே. என்ன ஞானமாய் இவை யெல்லாவற்றையும் அவர் படைத்திருக்கிறார்! அவர் மானிடர்மீது எவ்வளவு அன்பு வைத்து இவைகளை உண்டாக்கியிருக்கிறார். அவருடைய அன்பின் மாட்சி வானத்திற்கும் பூமிக்கு முள்ள உயரத்திற்கும், மேற்குக்கும் கிழக்குக்கு முள்ள தூரத்திற்குங்கூட இணையாகாதுபோலும். படைப்புப் பொருள்கள் யாவும் அவர் ஆணையின்படி நடந்து வருவது என்ன மேன்மையாக விளங்குகிறது! கடல் தன் எல்லையை என்றும் கடவாது. கதிரவனும் மதியும் வழக்கப்படி சுற்றி வந்து தம் வேலையைச் செய்கின்றன. நாமும் அன்னவரைத் தகுந்தபடி வணங்குவதற்காகப் படைக்கப்பட்டிருப்பதால் இரவும் பகலும் கடவுளைப் போற்றுவது எவ்வளவு சிறந்தது?'' என்று உரையாடிக்கொண்டே இரத்தினங்கள் இருவரும் உறங்கினார்கள்.